**செய்தி வெளியீடு எண்: 178** **நாள்: 04.03.2020**

## தமிழ்க் கலைக்கழகத்தின் 57ஆவது கூட்டம்!

## 452 சொற்கள் ஏற்பு!

நாள்தோறும் பெருகிவரும் பலதுறை சார்ந்த சொற்களுக்கு உடனுக்குடன் தமிழ்க் கலைச் சொல்லாக்கம் செய்து புழக்கத்திற்குக் கொண்டுவரும் பணியைத் தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தொடர்பணியாகச் செய்து வருகிறது. இப்பணிக்கென்றே இவ்வியக்ககத்தில் தமிழ்க் கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்க் கலைக்கழகத்தின் வாயிலாக 16,572 கலைச்சொற்கள் உருவாக்கப்பெற்று சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற இணையதளம் வழியாக மக்கள் பயன்பாட்டிற்கு வெளியிடப்பட்டுள்ளன.

இதைத்தொடர்ந்து 04.03.2020 புதன்கிழமையன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் ‘தமிழ்க் கலைக்கழகத்தின் 57–ஆவது கூட்டம் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 வரை நடைபெற்றது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மூத்த மொழியறிஞர் **முனைவர் இ.கோமதிநாயகம்** அவர்கள் சிறப்பு அழைப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளரும், மொழியாசிரியருமான **செம்மல் கிருட்டிணமூர்த்தி** அவர்கள் சிறப்பு நோக்கராகவும் கலந்துகொண்டனர்.

தமிழ்க் கலைக்கழகத்தின் மதிப்புறு உறுப்பினர்கள், அலுவல்சார், அலுவல்சாரா உறுப்பினர்கள், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத்தின் மொழி ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் 550 கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, 452 சொற்களுக்கு ஏற்பளிக்கப்பட்டது.

**இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**